பொது சன நூலகம்
08 MAR 2001
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News paper in Sri Lanka

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
# VALAMPURI

மங்கையரின் அழகுக்கு
மேலும் அழகூட்டும்
தங்க நகைகளை 22கரட்டில்
பெற்றிட இன்றே நாடுங்கள்.
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1574)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 24 வியாழக்கிழமை (8-03-2001) தொலைபேசி: 3378 ஒலி: 79

## ★ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு
# பேச்சுவார்த்தையே சாலச் சிறந்தது
# ராணுவத் தீர்வை நிராகரிக்கிறோம்

## அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸ் கருத்து

(யாழ். அலுவலக நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் மார்க்கம் என்பதை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். சமாதான பேச்சு வார்த்தை மூலமான தீர்வையே நாம் பெரிதும் விரும்புகின்றோம். இலங்கையில் பல்லின மக்கள் வாழுகின்ற நாடாக இருப்பதால் தமிழ் பேசும் மக்கள் சமத்துவமான உரிமையுடனும், சுயமரியாதையுடனும் வாழ வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.**

இவ்வாறு அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில்ஸ் நேற்றுக் காலை யாழ் பொதுசன நூலகத்தில் "இலங்கைப் பிரச்சினைகளில் சில அவதானிப்புக்கள்" எனும் தலைப்பில் உரையாற்றும் போது கூறினார்.

இக் கருத்தரங்கில் கல்விமான்கள், புத்தி ஜீவிகள் சமாதான விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பல தரப்பினரும் கலந்துரையாடினர்.

இக் கருத்தரங்கில் அஸ்லி வில்ஸ் மேலும் பேசுகையில் யுத்தம் விரைவாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் இதற்கு அரசியல் புரிந்துணர்வு அவசியமாகும். யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்புக்கள் மற்றும்காயமடைதல், அகதிகளாகுதல் போன்றவற்றை இனிமேலும்தாங்கிக்கொள்ள முடியாது.

இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய சமூகம் உட்பட பலநாடுகளும் நோர்வேநாட்டின் சமாதான முயற்சியினை ஆதரிக்கின்றன. ஆனால் இலங்கையில் இன்னுமொரு பிரதேசம் உருவாகுவதை நிராகரிக்கின்றோம்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் கிபிர் விமானம்
## தற்பாதுகாப்பில்
## யாழ்ப்பாணப் பெண்

கொழும்பில் இடம் பெற்று வரும் விமானப் படையின் கண்காட்சியை யொட்டி நேற்றைய தினம் இரத்மலானையில் நான்கு கிபிர் விமானங்கள் தாழப்பறந்து சாகசம் புரிந்தன. அச் சமயம் அப் பகுதியால் நடந்து சென்ற யாழ்ப்பாணத்துப் பெண்ணொருவர்கிபிர் விமானத்தின் பேரிரைச்சலைக் கேட்டு குண்டு போடப் போவதாக எண்ணி வீதியில் வீழ்ந்து குப்புறப் படுத்து விட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் தூதரக அதிகாரி
## யாழ்ப்பாணம் விஜயம்!

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள பிரான்ஸ் தூதரகத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரி லெப்ரினன் கேணல் பற்றிக் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்

இவருடன் தூதரகத்தைச் சேர்ந்த அனோலின் சன்சயனும் வருகை தந்துள்ளார்.

நேற்று இவர்களுடன்இடம் பெற்ற சந்திப்பின் போது துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரபிள்ளை பல்கலைக்கழகத் தேவைகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

இதேவேளை பி.பி.ஸி செய்தியாளரும் பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்து துணைவேந்தரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். (வ)

# வன்னிக்கான பொருளாதாரத்தடை
# மிகவிரைவில் நீக்கப்படும்!

## ஒருசிலதினங்களில் எரிக்சோல் கொழும்பு வருவார்

(கொழும்பு)

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்கு முன்னதாக வன்னி பகுதிக்கான பொருளாதாரத் தடை மிகவிரைவில் நீக்கப் படலாமென நம்பப்படுகிறது.

கடந்த3ந்திகதி கொழும்பு வந்துதிரும்பிய நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் இலண்டனில் புலிகளின் அரசியல்ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியபோது வன்னிக்கான பொருளாதார தடை நீக்கம்பற்றி எடுத்து கூறியதாக தெரியவருகிறது.

மீண்டும் ஓரிருதினங்களில் கொழும்புவரவுள்ள எரிக்சோல்ஹெய்ம் இவ்விஜயத்தின்போது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான திகதியைநிர்ணயிப்பதுடன் வன்னிக்கான பொருளாதாரத் தடைநீக்கம் பற்றியும்இறுதி முடிவெடுக்கப்படுமென நம்பப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்புக்குச் அரசதரப்பிலிருந்து இன்னமும் சாதகமான பதில் கிடைக்கவில்லை யென்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (ந)

## சம்பளஉயர்வுவிவகாரம்
## சமரசப் பேச்சுக்கள்
## தோல்வியில் முடிவு

(கொழும்பு)

400ரூபாசம்பள உயர்வு கோரி இடம்பெற்றுவரும் சத்தியாக்கிரகம் தொடர்பாக அமைச்சர் தொண்டமானுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை நேற்று தோல்வியில் முடிவுற்றது.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை கைவிடுமாறும் அல்லது ஒத்திவைக்குமாறும் ஜனாதிபதி சந்திரிக விடுத்த கோரிக்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானால் நிராகரிக்கப்பட்டதைஅடுத்து பேச்சுத் தோல்வியில் முறிவடைந்துள்ளது.

இதனையடுத்து தோட்ட முதலாளிமாருடன் கதைத்து பிரச்சினைக்கு முடிவுகாணு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க தூதுவருடன்
## துணைவேந்தர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்துள்ள அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ்தலைமையிலான தூதுக்குழுவினர் நேற்று யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் மாணவப்பிரதிநிதிகளைச்சந்தித்து பேச்சுநடாத்தினர்.

நல்லூர்கோயில் வீதியில் உள்ளயு.என்.டி.பி காரியாலயத்தில்12.30மணிக்கு இச் சந்திப்பு இடம்பெற்றது.

யாழ்பல்கலைக்கழகத்திற்கு தூதுக்குழுவினர் விஜயம்

→8ஆம் பக்கம்பார்க்க

## அவசரகாலச்
## சட்டம் நீடிப்பு

அவசரகாலச் சட்டத்தினை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை எண்பத்தைந்து மேலதிக வாக்குகளால்நேற்று பாராளுமன்றில் நிறைவேறியது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 102 வாக்குகளும் எதிராகப் 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன. [ந-4]

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன
## பணிப்பாளர் பதவிநீக்கம்

இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் எரிக்பனான்டோ கூட்டுத்தாபனத் தலைவர் ஜனதாச பீரிசுடன்ஏற்பட்ட சச்சரவு காரணமாக பதவி நீக்கப்பட்டுள்ளார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் அரசியல் தலையீடே இப்பதவி நீக்கத்துக்குரிய காரணமென்று தெரியவருகிறது.

இதேவேளை எரிக்பனான்டோ தற்பொழுது தகவல் ஆய்வு மற்றும் கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## செம்மணிக்கு
## சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டு நிலவரங்களை நேரில் கண்டறிவதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் தலைமையிலான தூதுக்குழுவினர்'

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பெற்ற குழந்தையை
## கொல்ல முயற்சி
## திருநெல்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பெண்ணொருவர் தனது பதினொருமாதப் பச்சிளங் குழந்தையை கொலை செய்வதற்கு எடுத்த முயற்சி அயலவரினால் முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை பாரதிபுரம் திருநெல்வேலியில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றித் தெரியவருவது; பிரஸ்தாபபெண் தனது பச்சிளம் குழந்தையை மேற்படி பகுதியிலுள்ள பற்றையொன்றுக்குள் வைத்து கொலை செய்யஎத்தனித்தபோது குழந்தை வேதனைதாங்கமுடியாமல் வீரிட்டுக் கத்தியது.

இதனால் அப்பகுதி மக்கள் உசாராகி பற்றைப் பகுதிக்கு சென்றபோது குழந்தையை அவ்விடத்தில் போட்டு விட்டு தாயார் தப்பியோடிவிட்

→ 8ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கோப்பாய் தெற்கு, கல்வியங்காடு எனும் முகவரியைச் சேர்ந்த காந்தமலர் ஐயாத்துரை என்பவருடைய தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் அல்லது வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (கி/1571)


## மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யா/பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை நேற்றும் இன்றும் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையில் நடத்தி வருகின்றனர்.

மேற்படிக் கருத்தரங்கு இரு நாட்களிலும் காலை 8.15 தொடக்கம் 9.15 மணிவரை நடைபெறுவதாக சம்பந்தப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (உ-9)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு

# 42 இலட்சம் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள்

## சர்வதேச அரிமாக்கழகம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

அரிமாக் கழகங்களின் மாவட்ட ஆளுநர் லயன் றோகத்த உடவத்தவும் (மாவட்டம்306பி), வேறுசில அரிமாக்கழகஉறுப்பினர்களும் எதிர்வரும் 19ஆம் திகதி 3ஆம் நாள்பயணமொன்றை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்குவருகை தரும் இக் குழுவினர், யா/போதனா வைத்தியசாலையின் கண்சிகிச்சைப் பிரிவுக்கு, சர்வதேச அரிமாக் கழகத்தினால் வழங்கப்பட்ட 42இலட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை எதிர்வரும் 20ஆம் திகதியன்று வழங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு தங்கியிருக்கும்காலத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள அரிமாக்கழகங்களிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொள்வார் என்றும்சாவகச்சேரி அரிமாக்கழக செயலர் லயன் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (6-எ)

## இலவச கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நாளையும் நாளை மறுதினமும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இலவச ஓவியக் கண்காட்சி ஒன்று இடம் பெறவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் இக் கண்காட்சி பெண்கள் சமகாலத்தில் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் என்பவற்றை சித்தரிக்கும் வகையில் அமைந்திருக்கும். [உ-6]

## இசை வகுப்பு

(நல்லூர்)

திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்ல மாணவர்கள்பயன்பெறும்முகமாக, சங்கீதம், தேவாரப்பண்ணிசை, நாட்டார் இசை போன்ற வகுப்புகளும் நடத்தப் பட்டுவருகின்றன. உ-103

## மகளிர் தின எழுச்சி கருத்தரங்கு

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, கியுடெக் நிறுவனத்தின், மகளிர் தின எழுச்சி நிகழ்வுகள், நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மட குருமட ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

மெலிஞ்சிமுனை, அல்லைப்பிட்டி, ஊர்காவற்றுறை, தம்பாட்டி, புங்குடுதீவு, காரை நகர், பருத்தித்துறை கரவெட்டி சக்கோட்டை, மணற்காடு, குடத்தனை, இளவாலை, யாழ்ப்பாணம், நாவாந்துறை, மற்றும் குருநகர்ப் பகுதிகளிலிருந்துசுமார் 500ற்கும் மேற்பட்ட மகளிர் மற்றும் பெற்றோர் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் திருமதி கோகிலா மகேந்திரனின் சிறப்புரையும் மகளிர் எழுச்சி கானமும் இடம்பெறும் [இ]




## தேரேறி வந்து தீர்வொன்றைத் தருவாய்

தேசநலன் காக்க காளிதாயே தேரேறி வருக!
தேடியுன்னைச் சரணடைந்தோம் காளி தாயே தேரேறி வருக
போரோய்ந்து மண்ணில் விடிவு தர தாயே தேரேறி வருக
புவன முழுதும் காத்தருளும் தேவி தேரேறி வருக
ஆரோடு நோவோம் எமது துயர் தீர்க்க தேரேறி வருக
அடைக்கலம் தந்து எம்மைக் காத்திட தேரேறி வருக
ஊரோடு கூடி உன் தேரிழுத்து வாழ காளி தாயே
உகந்த தீர்வொன்றை தமிழருக்கு தந்திடம்மா!

**மதுரகவி, காரை எம்.பி.அருளானந்தன்**

கன்னார் திட்டி காளியம்பாளின் தேர் விழா சிறக்க வாழ்த்துவோர்

**அர்ச்சனா நகையகம்**

118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

[கி-1578]


## அழைப்புக் கட்டளை

### இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/ மாவட்ட நீதிமன்றத்தில்

**சதானந்தன் பெண் றோசினி,**
சைவ வித்தியாசாலை லேன்,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

வழக்கு இல. மணநீக்கம்/186

எதிர் — வழக்காளி

**தேவதாசன் சதானந்தன்**
இராமலிங்கம் றோட்டு,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
எதிராளி/

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் இடையே நடைபெற்ற விவாகப் பதிவை, எதிராளி வழக்காளியை வேண்டுமென்று வன்மையாகத் துறந்தார் என்ற காரணத்துக்காக ரத்துச் செய்து ஒரு மணநீக்கத் தீர்வையை இம் மன்று இட வேண்டும் என மன்றிடம் கோரி

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2001 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆந் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**து. சிறீமோகன்**

எம்மால் வரையப்பட்டது. — பதிவாளர்,
**கனகரத்தினம் அசோசியேட்ஸ்** — மாவட்ட நீதிமன்றம்,
(வழக்காளியின் சட்டத்தரணி) — யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம், பதிவாளர்- மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம். 2001 ஆண்டு பங்குனி மாதம் 05 ஆந் நாளாகிய இன்று.

(2593)

## யுத்த...

(7-ம பக்கத் தொடர்ச்சி)

தறிக்கப்பட்டும் காணப்படுகின்றன

### முயற்சிஸ்தம்பிதம்

இப் பகுதி மக்களின் குடியிருப்புக்களை ஊடறுத்து இராணுவ பாதுகாப்பு முட்கம்பி வேலிகள் செல்வதனால் பலவீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் மக்களின் போக்குவரத்துக்குரிய பாதைகள் இம்முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கப்பட்டுள்ளதால் பாதைகள் இன்றி மக்கள் வயல்வெளிகளூடாகவும், வீடுகள் மற்றும் காணிகளுக்குள்ளாகவும் புகுந்து செல்ல வேண்டியதொரு நிலைமை இங்கு நீண்டகாலமாக நிலவி வருகிறது. இதனைப் போக்க சனசமூக நிலையங்கள் மற்றும் இருபாலைப் பகுதி பொது அமைப்புக்கள் முயன்ற போதும் கைகொடுப்பார் யாருமின்றி முயற்சி ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகிறது.

### பாடசாலைகள் பாதிப்பு

இப்பகுதியில் காணப்படும் அரச கல்விக் கூடங்கள் இரண்டும், தளபாடங்கள், சொத்துக்கள் ஆகியவற்றை இழந்து மீள இயங்குவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இருபாலை கந்தவேள் வித்தியாலயம் மற்றும் இருபாலை அரச தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவையே கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்து காணப்படும் பாடசாலைகள்.

ஆலயங்கள் இப்பகுதியில் காணப்படும் பொது அமைப்புக்கான சனசமூக நிலையங்கள் என்பனவும் யுத்தத்தால் பாதிப்படைந்து செயற்பாடுகளை இழந்த நிலையில் காணப்படுகின்றன.

பொருளாதார ரீதியில் வறிய மக்களாக இப்பகுதி மக்களில் பெரும்பான்மையோர் இருப்பதனால் இவர்களைப் போர் அனர்த்தப் பாதிப்பு பெரிதும் தாக்கியுள்ளது. வலிகாமத்தில் தென்மராட்சிப் போரின் தாக்கத்தை அனுபவித்தது இருபாலையெனில் அது மிகையல்ல.

இப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் தேவையை உணர்ந்து இப்பகுதிக்கு விரைந்து, இப் பிரதேசத்தின் தேவை மற்றும் இன்றைய நிலைமை மக்களின் வாழ்க்கைத் தரம் என்பனவற்றை அறிந்து பொருத்தமான உதவிகளை வழங்குவது கட்டாய தேவையாகும்.

## வரலாறு நீள நினைக்கும்



மாமனிதர் கலைஞானி

தமிழர் பூர்வீகத்தைத் தேடி அலைந்தோர் பலர் அவர்களுள்ளே தனியனியனாக நின்று, தன்வாழ்வைத் தமிழுக்கும் தமிழர்க்கும் முழுமையாக அர்ப்பணித்து தரணியிலே மாமனிதராக எம் மத்தியில் இன்றும் வாழ்ந்து வரும் கலைஞானி அ.செல்வரத்தினம் அவர்கள், குடாநாட்டின் தொல்பொருள் மற்றும் அரும் பொருள் சேகரிப்பாளர் மத்தியிலே முதலிடம் வகிப்பவர். அவர் தம் தன்னல மற்ற தமிழ்த் தொண்டைப் போற்றுவதும் கௌரவிப்பதும் இன்று எமக்குள்ள மிகப் பெரிய கடனாகும் அருங்குணத் தோன்றலின் 54 வருடகால கலைச்சேவையைப் பாராட்டுமுகமாக 'கலைஞானியும் கலைத்தொண்டும்' என்ற நூலை வெளியிட்டு வைக்கிறோம் இவ் விழா எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராயில் இயங்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

### மாமனிதரை வாழ்த்தத் திரண்டு வாரீர்

'உன் உண்மை உள்ளம் உணரும் வரை உயர்ந்த உள்ளத்தை உணரமாட்டாய் உண்மை இது' என்ற வாசகத்தைத் தனது தாரக மந்திரமாகக்கொண்டு அன்றும் இன்றும் செயற்படும் இவர் தமிழர் வரலாற்றுக் கருவூலங்களை அனைவரும் வியக்கும் வகையிலே பேணிப்பாதுகாக்கும் பூர்வீகத்தின் காவலன்.

1974 தமிழாராட்சி மாநாட்டின் போது கலந்து கொண்ட மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கொடுமுடி சண்முகத்தின் பாராட்டும், 1991 இல் முற்றவெளியில் முத்தமிழ் விழாவின் போது வழங்கப்பட்ட 'மாமனிதர்' விருதும் இவரின் சேவைக்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்த நிகழ்வுகள் எனலாம்.

தமிழுக்காக வாழ்வை அர்ப்பணித்த மாமனிதரை வரலாறு நீள நினைத்திருக்கும்.

**''உயிரைக் கொடுத்தும் தமிழைக் காப்போம்''**

எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி
(நூலாசிரியர் ''கலைஞனியும் கலைத்தொண்டும்'')

பொதுச் செயலாளர்
''கலைஞானி கலைக்கூடம்''
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (கி/1577)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## வேலைப் புறக்கணிப்பு போராட்டம் முடிவு

(கொழும்பு)

மத்திய மாகாணத்தின் தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுடன்முடிவடைந்துள்ளது.

ஒருவார காலமாக மேற்கொள்ளபபட்ட இவ் வேலை நிறுத்தம் மாகாணப் போக்குவரத்து அமைச்சருக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து கைவிடப்பட்டுள்ளது. [உ-9]

## குண்டுதாரிகளைக் கொழும்புக்கு அழைத்துச் செல்லஇருந்தவர் கைது

(கொழும்பு)

தற்கொலைக் குண்டு தாரிகளை கொழும்புக்குஅழைத்து வருவதற்கு பொறுப்பாக இருப்பவர் எனக் கருதப்படும் நபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ஆரியம்பதிப் பகுதியில் கைது செய்யப்பட்ட இந்நபர் தற்கொலைபாளிகளை கொழும்புக்கு அனுப்பி வருவதாகவும்.

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புபவர் போல நடித்தே இதனை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது. (உ-9)

# மகளிர் தினக் கவிதைகள்

## 'போராட்டம் பேதமையா?'

'பெண்ணினத்திற் கென்ன குறை இனி
பேணுதற்கு யாது உண்டு
வீட்டுக்குள பூட்டார், வீதிவரத் தடையா;
ஏடு தொடுதற்கு இடையூறா;
நேர் கொண்ட பார்வைக்கும்
நிமிர்ந்த நடைக்கும்
யார் தடையாய் நின்றார்கள்?
ஆசையினால்,
மார்ச் எட்டில் மகளிர் தினமேன்?
மகளிர் உரிமைக்காய்
போர்க் கொடி தூக்குவதேன்?'

கேள்வி மேல் கேள்வி நாற்பக்கம் இருந்து
பாணம் போல் பாய்கிறது;
கூசாமல் விடை கூறுகின்றாள்
கேளுங்கள் ஆணினமே!

கொடி என்பீர் எம்மை; கொம்பென்பீர் உம்மை
கொடியெம்மைத் தாங்க கொப்பால் முடியுமென்றால்
இடையிலே சீர்வரிசை இடையூறு பண்ணுவதேன்?
பொருள் கொள்வோர் பணம் கொடுப்பார்- நீவீர்
பொருளோடு பணம் கேட்பீர்
புதுமை வியாபாரம் புரிகின்றீர்!

தேனென்பீர் கரும்பென்பீர்- சுவைப்பதற்கு
கூலிக்கு அடம் பிடிப்பீர்
கண் என்பீர் உயிர் என்பீர்
காதல் பெரிதென்பீர்; கைப்பிடிக்க நாள் கேட்டால்
அன்னைக்கும் அப்பனுக்கும் மனமில்லை
ஆதலினால் கண்ணே என்னை மற என்பீர்
சொல்லுதற்கு உமக்குச் சில நிமிடம்
சோகம் சுமந்து நாம்
கண்ணீர் வடிப்பதற்கு பலவருடம்
சொல்லுமையா!
பெண்ணினத்தின் போராட்டம் பேதமையா?

வே. இளையதட்டி
புத்தூர்.

## உருகிப் பிரார்த்தியுங்கள்

வானொலிகளோடு,
தொலைக் காட்சிகளும்,
வீதியெங்ஙணும் உலா வந்தே,
புதினங்கள் கூறிக் கொள்ளும்,
பத்திரிகைகள் எல்லாமே,
உங்களுக்காய் இன்றெழுந்தோம்,
வாழ்த்துக்கள் என்கின்றன,
ஓ; இன்று மகளிர் தினம்
பா, வினில் வடித்திட...,
முடியாத சோகங்களை,
சுமந்து கொண்டு
இங்கே, மகளிர்
உலகெங்ஙணும்
ஆர்ப்பரித்து நிற்கும் பெண்களே!
உருகிப் பிரார்த்தியுங்கள்,
காற்று காவி வருகின்ற,
வாழ்த்துக்கள் அனைத்துமே,
நமக்கு நலங்களைச்,
சேர்க்கட்டு மென்றே,

மீசாலையூர் கமலா

## பெண்மையை உணர்வாயா?

சொத்திருந்தும் சுகமிருந்தும்
எம் விருப்பிற்கிடமிருந்ததோ?
குழந்தையில் காலாட்டவும்
கைவீசவும் கற்றுத் தந்த பெற்றோர் -இன்று
வாய்திறந்தோர் வார்த்தை பேசத் தடைவிதிப்பதேன்
பெண்ணெனப் பிறந்ததற்காகவா?

சின்னச் சின்ன ஆசைகள்
சிறகொடிக்கப்படுகின்றது
புயலாக வேண்டிய என்னுள்ளம்
புதைக்கப்படுகின்றது
கண்ணீரால் காவியம் பாடுகின்றது

சொந்தக் காலில் நில் எனக் கூறும் நீயே
சொந்தக் காலை முறிக்கின்றாய்
ஆட்டக்காரி அடங்காப்பிடாரி என்கிறாய்
பெண்மையே தெரியாமல் பெண்ணை
சிதைக்கின்றாய் வதைக்கின்றாய்

தர்மினி பத்மநாதன்

## மாண்புமிகு மகளிர்

அகப்பை பிடிக்கும் கைகளும்
கோர ஆயுதம் ஏந்தும் புதுஉலகம்
பாரடா மனிதா உன் தாய்க்குலத்தை
கவிப்புலவர்கள் பாடிவைத்த பெண்ணினத்தை

சிறைதூக்கிய கோழை அவள் இராவணனை
ஒரு தூசென மதித்ததும் பெண்மையடா
நடுக்காட்டிலே விட்ட அந்த காமுகனை
தன் கண்ணென மதித்ததும் பெண்மையடா

சுடுகாட்டிலே நின்ற தன் கணவனையும்
வாய்மைகாத்திட வைத்ததும் பெண்மையடா
பாதகம்புரிந்த பாண்டியனை
பதியுடன் எரித்ததும் பெண்மையடா

தனிநாட்டை ஆண்டிடும் தலைவர்களில்
பெரும் சாதனை புரிவதும் பெண்களடா
உயிர்காக்க வைத்திடும் வைத்தியரில்
அதிகமான உத்தமர் பெண்களடா

பாரதி கண்ட பெண்களிலே
சாரதி ஆனதும் பெண்களடா
இது போதும் என்று நீ சொன்னாலும்
உன்னைப் பெத்துப்போட்டதும் பெண்களடா.

மாசியப்பிட்டி சீமாட்டி

## பெண்நாளிற்(கு) கென்பா

திருமணம் என்ற திருவிழா செய்தலிற்(கு)
கிருமனம் முக்கியம்-அருணனே
தனங்களுக்காகவே 'மணத்தினுள்' விழுபவர்
குணத்தினை வந்திங்கு கொழுத்து

சேலி பேசலும் கேடுசெய்தலும்
வேலி வேலியாய் விரட்டலும் கூடவே சோலி தருமென

கற்றவர் கூறுவார்; பெண்களை
உற்ற உறவென்று எண்ணு

பெண்ணுக்குப் பெண்ணே எதிரியாகுமோர்
தன்நலம் உளவரைத் தரணியில்-பெண்ணின
மேன்மையும் பெருமையும் பேசலை
எண்ணினால் எழுந்திடும் சிரிப்பு

பெண்களுக்கிங்கோர் தனித்துவமுண்டதை(க்)
கண்கள் போலவர் காத்திடின்-மண்ணிலும்
விண்ணிலும் தண்ணளி உண்டாகும்;
பெண்ணா(நா)ளும் பெறும் பெருமை

ரீ. ரீ. மயூரன்

## பெண்ணே விழித்துக்கொள்

பெண்ணே விழித்துக்கொள்!
மகளிர்தினம் மார்ச் எட்டு
மகளிரைப் போற்றுவோர் எத்தனைபேர்?
பெண்ணே விழித்துக்கொள்!
புதிய நூற்றாண்டிலும்-பெண்ணை
பூட்டிவைக்கும் விந்தைமனிதர் ?)-இங்குளர்
பெண்ணே விழித்துக்கொள்!
உண்டு உறவாடிப் பின்-எட்டியும்
உதைப்பர்; எவரையும் நம்பாதே.
பெண்ணே விழித்துக்கொள்!
ஆணும் பெண்ணும் சரிநிகர்-அது
வெறும் பொய்ப்பேச்சு
பெண்ணே விழித்துக்கொள்!
படி தாண்டியவளுக்கு இன்று
கிடைக்கும் பட்டம் பத்தினியல்ல?

-சிவாணி-

## பெண்ணே எழுந்திரு!

பெண்ணே எழுந்திடு மார்ச் எட்டு- இன்று
பாரினில் எழுந்திடு மார்ச் எட்டு

உரிமை உனக்கு யார் தருவது- அது
உன்னிடமே உள்ளது அதை எட்டு

சரிநிகர் ஆடவர்க்கென இயம்பாதே- இங்கு நீ
சரிநிகர் அவர்க்கென முயற்சியால் எட்டு

ஆசைகளால் அல்லலுறும் அவல நிலை போக்கி நீயும்
அன்பாலே உயிர்களின் இதயத்தை எட்டு
கலாசாரம் காற்றாகும் கடைநிலை கழிய- நீ
கற்போடு கல்வியின் சிகரத்தை எட்டு
பண்பாடு படிப்படியாய் பாழாகும்- இப்பாரில் நீயும்
பண்போடும், பணிவோடும் பரிசை எட்டு

ச. சுஜாதா
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## வவுனியா ரயிலில் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த தபால் ரயிலில் பயணம் செய்த ஒருவரின் பெறுமதிவாய்ந்த பொருட்கள் கள்வரால் சூறையாடப் பட்டுள்ளன.

வவுனியா ஆசிக்குளத்தைச் சேர்ந்த கு. பவானந்தம் என்பவர் இந்தியா சென்று திரும்பிய பொழுதே, அவர் கொண்டு வந்த பொருட்கள் அனைத்தையும் பறிகொடுத்துள்ளார். (செ)

## கருத்தரங்கு

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் தரம் ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மனித மேம் பாட்டுக் கல்வி சந்திப சாயி முறை கருத்தரங்கு எதிர்வரும் 10 11 ஆம் திகதிகளில் காலை 8 30 தொடக்கம் பிப 3 30 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-79)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துசமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் எழுதிய சிவசக்தி "அநுபூதி" நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு, சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில், உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில், நாளை வெள்ளிக்கிழமை மு. ப 10 30 மணிக்கு அறிமுகவுரையைத் தொடர்ந்து,, என்ன புண்ணியம் செய்தனை?'' என்னும் தலைப்பில், வலிகாம வலய உதவிக்கல்வி பணிப்பாளர் திருமதிகோகிலா மகேந்திரன் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திருமதி பகீரதி கணேசதுரை ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். (செ)

## விபத்தில் கால்முறிவு

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் கால் முறிந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வி வீரன்[வயது67] என்பவரே நெல்லியடிப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிள் விபத்தில் அகப்பட்டவராவார். [உ-10]

## செய்தி துளிகள்

### மாதாந்த இசையரங்கு

(நல்லூர்)

நல்லூர் சட்ட நாதர் வீதியில் உள்ள இளங் கலைஞர் மன்றத்தின் மாதாந்த இசையரங்கு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில்செல்வன் ஞானசொரூபன், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகளும் செல்வி. வர்சுகிரங்கனின் வீணைஇசையும் இடம் பெற்றன.

(உ-103)

### நாய்களால் தொல்லை

(நல்லூர்)

கந்தர்மடம் இந்து மகளிர் ஒழுங்கை குமாரசாமி வீதி, ஆத்திசூடி வீதி என்பவற்றில் கட்டாக்காலி நாய்களின் தொல்லையினால் பாடசாலைக்குச் சென்று வருகின்ற சிறுவர் சிறுமியர் அச்சத்துடன் செல்லவேண்டியுள்ளதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. [உ-103]

### வட்டுவில் இயங்கும் கூ. கிளை

(கல்வயல்)

தென்மராட்சி மேற்கு கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 7 ஆம் இலக்கக்கிளை நிலையம் சித்தன்கேணிச் சந்திக்கு அண்மையில் வட்டுக்கோட்டை வீதியில் இயங்கி வருகின்றது.

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண விநியோகத்தையும் பொருள்விற்பனையையும் இக்கிளை மேற்கொண்டுவருகின்றது.

(க-111)

### மகளிர் தினநிகழ்வு

(நெடுந்தீவு)

யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்று மகளிர்தின நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை பாடசாலையின் சமூகக்கல்வி மன்றத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (உ-82)

### சமுர்த்தி கைநூல் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான 2001-ம் ஆண்டுக்குரிய தினப்பதிவேடுகளும் சமுர்த்தி தொடர்பான கைநூலும் யாழ் செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பதிவேடுகளும் கைநூல்களும் தேவைப்படும் சமுர்த்தி முகாமையாளர்கள் யாழ் செயலகத்தில் இயங்கும் மாவட்டசமுர்த்தி ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அவற்றை பெற்றுக் கொள்ள முடியுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

(உ-15)

### கல்விச் சுற்றுலா

(மந்துவில்)

பலாலி ஆசிரியர்கலாசாலை விஞ்ஞான, உடற் கல்விப் பயிற்சி ஆசிரிய மாணவர்கள் அண்மையில் வடமராட்சிப் பகுதிக்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

மணற்காடு, வல்லிபுரக் கோயில், செல்வச்சந்நிதி, திக்கம் வடிசாராயத்தொழிற்சாலை போன்ற இடங்களுக்கு இவர்கள் சுற்றுலா சென்று திரும்பினர். (உ-39)

### பாராட்டு விழா

(அரியாலை)

ஜனசக்தி சனசமூக நிலையத் தலைவர் வ. தம்பித்துரை சமாதானநீதவானாக நியமிக்கப் பட்டமையைப் பாராட்டி எடுக்கும் விழா நாளை வெள்ளிக் கிழமை பி. ப. 3 மணிக்கு ஜனசக்திகலையரங்கில் நடைபெறும். (உ-106)

### இன்று தேர்

[நெடுந்தீவு]

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்தசுவாமியார் கோவில் தேர் உற்சவம் இன்று இடம் பெறவுள்ளது. [உ-82]

### சுற்று நிருபம் அனுப்பிவைப்பு

(நல்லூர்)

யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு நடாத்தவுள்ள பண்ணிசைப் போட்டி சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்று பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(க-103)

### மரதன்ஓட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்கிறிஸ்தவ கல்லூரியில்எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டியைமுன்னிட்டுநேற்று முன்தினம் கல்லூரியின் மாணவ, மாணவிகள் மற்றும் பழைய மாணவர்கள் பங்குபற்றிய ஐந்துமைல் மரதனோட்டம் நடைபெற்றது.

காலை 7.00 மணிக்கு போட்டியை கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் ஆரம்பித்து வைத்தார். (இ)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

[மந்துவில்]

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வ. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு, போரூட் நிறுவன பொறியியலாளர் நா. கோகுலதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

(செ-39)

### கலாசாலையில் சிரமதானம்

(கோப்பாய்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரி இயங்கும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில், கல்வியற் கல்லூரியின் பயன்பாடு மற்றும் செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் எஸ். தயாபரன் தலைமையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இச் சிரமதானப் பணிகளில் கோப்பாய் தெற்கு ''விண்மீன்'' இளைஞர் கழகத்தினர் ஈடுபட்டனர். (இ)

### உழவு இயந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் பயன்பாட்டுக்காக புதிய இரண்டு சில்லு உழவு இயந்திரங்களைக்கமநல சேவைத்திணைக்களம் வழங்கியுள்ளது.

ஒவ்வொன்றும்சுமார் இரண்டு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இவ் உழவு இயந்திரங்கள் மூலம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சேரும் கழிவுப்பொருட்கள் அகற்றப்படுமென பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. க1

## இடம் பெயர்ந்த மக்களின், சொத்து இழப்பீட்டு விபரம்

## சேகரிக்கும் பணி நாளை ஆரம்பம்

(மந்திகை)

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்தோரின் சொத்து இழப்பீட்டு விபரங்கள் சேகரிக்கும் பணிநாளை 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமராட்சி இடம் பெயர்ந்தோர் நலன் புரிச்சங்கத்தின் தலைவர் ஏ. அரியகுமார் தெரிவித்துள்ளார்.

தும்பளையில் இயங்கும்வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கஅதிபர் அலுவலகத்தில் வைத்து இவ் இழப்பீட்டுவிபர படிவம் விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை வெற்றிலைக்கேணி முள்ளியான், நாகர்கோவில் மேற்கு, நாகர் கோவில் தெற்கு, அம்பன் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும்,

10 ஆம் திகதி சனிக்கிழமை நாகர் கோவில் கிழக்கு, செம்பியன்பற்று தெற்கு, உடுத்துறை, போக்களுப்பு கிராம அலுவலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும்.

11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆழியவளை செம்பியன்பற்று வடக்கு, மருதன் கேணி, வத்திராஜன், சுண்டிக்குளம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் விண்ணப்பப்படிவம்வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்படிவங்களை17ஆம்திகதி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என அவர் மேலும்தெரிவித்துள்ளார். (உ-23)

### உதை பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்மைக்கல் விளையாட்டுக்கழகம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தி வரும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பொற்பதி வி.க.எதிர் கோண்டாவில் மத்தி வி. க.றோயல் வி. க; எதிர் வீனஸ் வி. க. என்பன மோதவுள்ளன.

(உ)

## கோழித் தீவனங்களுக்கு குடா நாட்டில் தட்டுப்பாடு

(கல்வயல்)

கோழித் தீவனங்களுக்கு அடிக்கடி ஏற்படும் தட்டுப்பாட்டு நிலையினால் கோழி வளர்ப்புத் தொழில் மிகவும் பாதிப்புற்று வருகிறது.

குஞ்சுத்தீவனம், வளரும் கோழித் தீவனம், முட்டையிடும் பருவ கோழித்தீவனம், இறைச்சிக் கோழித்தீவனம் இவற்றில் ஏதாவது ஒன்றுக்கேனும் எப்போதும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் கோழிவளர்ப்பில் ஈடுபடும் சிறுதொழில் முயற்சியாளர் தமது பணியை இடைநடுவில் விட்டுவிட வேண்டியுள்ளதுடன் அவர்களால் முதலிடப்பட்ட பணமும் வீண் விரயமாகின்றது.

இதேவேளை யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கோழித்தீவனத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கோழி உணவுப் பொருட்கள் இங்கு போதாதிருப்பதும் தென் பகுதியில் இருந்து கப்பலில் வரும் கோழித்தீவனத்தையே நம்பியிருக்க வேண்டியநிலை தொடர்வதும் குறிப்பிடத்தக்கது. (உ-111)

## நாடக கூத்து விழாவும் பயிற்சிப் பட்டறையும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கலாசாரசபையின் ஏற்பாட்டில் யா/திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் பங்குபற்றும் நாடக கூத்து விழாவும் நாடகப்பயிற்சிப் பட்டறையும் நாளை 9 ஆம் திகதி மற்றும் மறுதினம் 10 ஆம் திகதி யா/நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம் பெறும் முதல்நாள் நிகழ்வுகளில் சோழன் மகன்[நாட்டுக்கூத்து] ஜீவப்பிரயத்தினம் (நவீனநாடகம்)கனவில் ஒரு நிஜம்(ஓராள் அரங்கு) அரிச்சந்திர மயானகாண்டம் [இசைநாடகம்]என்பன இடம் பெறவுள்ளன.

நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் புலவர் ஏ டபிள்யூ அரியநாயகம் தலைமையில் இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் காலை 9 மணிக்கு திருமறைக்கலா மன்ற கலைஞர்களான ஜி.பி. பேர்மினஸ், ஜே.யோன்சன் ராஜ்குமார், எம்.சாம் பிரதீபன், ரி.கண்ணன் ஆகியோர் நாடகப் பயிற்சிப் பட்டறையை நிகழ்த்துவர் மற்றும் பூதத்தம்பி (இசைநாடகம்) கூடித்துயர் வெல் [சிறுவர்நாடகம்] எங்கட பிள்ளைகள் [ஓராள் அரங்கு] போன்ற நிகழ்வுகள் இடம் பெறும். (உ)

## கைதடிப் பகுதியில் கள்ளின் விலை உச்சம்

(கோப்பாய்)

கைதடிப் பகுதியில் ஒரு போத்தல் கள் 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

கோப்பாய், உரும்பிராய், கோண்டாவில் பகுதிகளில் இருந்து எடுத்துச் செல்லப்படும் கள்ளே 7 ரூபா கூட்டி 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

கைதடிப்பகுதி சீவல் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்த காரணத்தினாலும், அங்கு மீளத் தொழில் ஆரம்பிக்கப்படாமையினாலும் இந் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

## பாக் ரயில் வண்டிகள் பாவனைக்கு உதவாதவை

(கொழும்பு)

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை அரசால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட 40 ரயில் வண்டிகளும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தகுதியற்றவையென பிரதிப் போக்குவரத்து அமைச்சர் கூறியதாக கொழும்பில் இருந்து வெளியான செய்திக் குறிப்பொன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக உண்மை நிலையினை கண்டறியுமாறு ஜனாதிபதி குமாரதுங்க போக்குவரத்து அமைச்சர் தினேஸ்குணவர்த்தனாவை வக் கேட்டுள்ளார். (உ-4)

## சமாதானப் பேச்சில் அரசுக்கு நாட்டமில்லை

### அரசியல் ஆய்வாளர்கருத்து

(கொழும்பு)

சமாதனப் பேச்சுவார்த்தைகளை குழப்பும் முயற்சியிலேயேதொடர்ந்தும் அரசாங்கம் ஈடுபட்டுவருவதாக அரசியல்அவதானிகள்கருத்துவெளியிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு தடை செய்தால் அவர்கள் பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒதுங்கி விடுவார்களென, அரசுஎதிர்பார்த்தாதகவும், அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றமை அரசுக்குஏமாற்றத்தைச் கொடுத்துள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர் ஒருவர் கொழும்புப் பத்திரிகையில் வரைந்த கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசு தனது படைபலத்தை அதிகாரித்தும் பலப்படுத்தியும் போர் நிறுத்தம் செய்யாது விடுதலைப் புலிகளை போர் செய்யத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருகிறது எனவும் அந்த ஆய்வாளர் தனது கட்டுரையில்குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## யா. கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு சேவைக்கால செயலமர்வு

(அச்சுவேலி)

வவுனியா மற்றும் மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் பயிற்சியினை நிறைவு செய்து தற்சமயம் பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களால் யாழ் கல்வியியற் கல்லூரியின் முதலாம் அணி மாணவர்களுக்கு அண்மையில் விசேட சேவைக் கால செயல் அமர்வுநடத்தப் பட்டது.

யாழ். கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்வில் கல்வியியற் பரீட்சை மற்றும் இப்பிரச்சினைகளை அணுகுவது தொடர்பானதுமான பல விடயங்கள் ஆராயப்பட்டன.

மிகவும் பயனுடைய முறையில் அமைந்திருந்தஇச்செயலமர்வு யாழ். கல்வியியற் கல்லூரியில் முதற்தடவையாக இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. [உ-14]

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# மனச்சாட்சிக்கு அடங்கிநட

நமது உடம்பில் இயங்கும் மனம் என்ற பகுதி பெரும்பாலும் நமக்குப் பிடித்தமான எளிய ஆசைகளையே நாளும் தீர்த்துக் கொள்ளும்படி நம்மைத் தூண்டுகிறது இப்படித் தூண்டுவதே சாதாரணமனிதனின் மனம்பெரும்பாலும் செய்கின்றகாரியமாகும். அப்படி அது செய்யும் போது அதற்குச் சௌகரியமான ஒரு காரணத்தையும் சொல்லிச் சமாளித்துக்கொள்ள உதவுகிறது உதாரணமாக, நாம் செய்யக் கூடாத ஒன்றைநாம் செய்யவேண்டி இருக்கும் போது, இந்த ஒரு தடவை மட்டுந்தானே என்றும், இதனால் யாரும் பாதிக்கப்படவில்லையென்றால் அது தவறானது இல்லையென்றும், வற்புறுத்தி அந்தக் காரியத்தைச் செய்யுமாறு நம்மைத் தூண்டுகிறது.

இவ்வாறு வெளியே உள்ள சந்தர்ப்பங்களையும், சூழ்நிலையையும் வைத்து, நம்மைப் பணியவைப்பது நம்முடைய ஐம்புலன்களின் ஆசைகளையொட்டிய மனமாகும். ஒருவன் தனது வாழ்க்கையில் மிகவும் கட்டுப்பாடான, சிறப்பான நியதிகளைக் கடைப்பிடிக்க வில்லையானால், அநேகமாக இந்தச்சமாதானத்தை ஏற்றுக்கொண்டு, அந்த ஆசைகளை ஏற்றுக் கொண்டு அந்த ஆசைகளுக்குப் பணிந்து போய் விடுகிறான்.

இந்தச் சமாதானம் சரியல்ல என்று நமக்கு நாமே விளக்கிக் கொண்டு, எது உண்மையாகவே சரியானது என்று ஒரு கனம் ஆராய வேண்டும். ஆசைகளின் உடனடியான வேகத்துக்கு இடம் கொடுக்காமல், விவேகத்தின் நிதானமான ஆராய்ச்சிக்கு இடம் தர வேண்டும். இப்படி நம்மை ஆராயத் தூண்டுவது தான் அறிவு. அவ்வாறு அறிவு எடுத்துச் சொல்லும் போது, அதை அடக்கி விடாமல் அதற்கு வாய்ப்புக் கொடுக்க நம்முடைய மனத்தைப் பழக்கப் படுத்த வேண்டும்.

தவறு செய்த பிறகும் இந்த மனப்போராட்டம் தொடருகிறது. தூது தவறு அல்ல என்பதற்கு ஆயிரம் சமாதானங்களை மனத்தின் பெரும்பகுதி சொல்லுகிறது. அது தவறு தான். அதை உணர்ந்து கொள். இனி மேல் செய்யாதே என்று இடித்துக் கூறுகிறது மனத்தின் ஒரு சிறிய பகுதி அந்த நிலையிலாவது தான் செய்தது தவறு என்பதை உணர்ந்து, தொடர்ந்து அதைச்செய்யாமல் இருந்தோமேயானால், அந்தத் தவறும் நம்மைப் புனிதப் படுத்திக் கொள்ள உதவும். ஆனால், பெரும்பாலும் ஒரு சாதாரண மனிதன் இந்த இரண்டு நிலைகளிலும் அறிவுக்கு இடம் கொடுப்பதே இல்லை. ஆசைகளிலேயே தன்னை இழந்து விடுகிறான்.

இப்படிப்பட்ட நிலையிலும் உண்மையான மனச்சாட்சி பலம் இழந்து விடுவதில்லை. அவன் சாகும் வரையில் அவனுக்கு அறிவுப் பூர்வமான ஆலோசனையை எடுத்துச் சொல்லி அவனைத் திருத்த முயன்று கொண்டேயிருக்கிறது. அதனால் தான் வாழ்க்கையின் முற்பகுதியில் தவறு செய்தவர்கள், அதன் பிற்பகுதியிலாவது நன்மை செய்ய முற்படுகிறார்கள். மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டு நல்லவழியில் செயற் படும் மனப்பக்குவத்தை நாம் எவ்வளவு சீக்ரம் அடைகிறோமோ அந்த அளவுக்கு நாம் விரைவில் உயர்ந்து விடுவோம்.

க. க. இராமலிங்கம்

# கள்வர் கொட்டமடக்க காவலரண் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதிப் பகுதியில் படையினரால் புதியகாவலரண் ஒன்றுஅமைக்கப்பட்டுள்ளது.

திருட்டுக் கோஷ்டிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் நோக்குடனேயே இக்காவலரண் அமைக்கப் பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-104]

யாழ். போதனா வைத்தியசாலையில்

# 70 இலட்சம் செலவில் புதிய மருந்துக்களஞ்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் விரைவில் புதிய மருந்துக்களஞ்சியம் அமைக்கப்படவுள்ளதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கானநிதியாகரூபா70 இலட்சத்தைச் சுகாதார அமைச்சு ஒதுக்கவுள்ளது.

மருந்துக் களஞ்சியம் அமைப்பதற்காக வைத்தியசாலை இரத்தவங்கிக்கு முன்பாக கட்டடத்திற்கான அடித்தளம் இடப்பட்டு பல வருடங்களாகியும் நிதிப்பிரச்சனையால் அப்பணி இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ந்து மீண்டும்கட்டட அமைப்புப்பணி ஆரம்பிக்கப் படவுள்ளது. (உ-104)

# இலவச பாடநூல் விநியோகம் ஆரம்பம்

[ஆவரங்கால்]

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கான இரண்டாம் கட்ட இலவச பாடநூல்கள் விநியோகம் கடந்த 5ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது.

பாடசாலை விடுமுறை காலம் அண்மிக்கின்றகாரணத்தினால் மேற்படி பாடநூல்கள் விநியோகம் துரிதமாக இடம் பெறுகிறது.

தரம் 8 இற்கான விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், தரம் 11இற்கான சுகாதாரமும் உடற்கல்வியும் பாடநூல்கள் தவிர்ந்த ஏனையவை கணிசமான அளவு கிடைக்கப்பெற்றிருப்பதாகவும்,

மூன்றாம்கட்ட பாடநூல் விநியோகமும் விடுமுறைக்கு முன்னதாகவே இடம்பெறவுள்ளதாகவும் கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி சிவஞானசுந்தரம் தெரிவித்தார். [உ-57]

# மாணவர் நலன் பேணல்

(நல்லூர்)

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் மாணவர்களின் நன்மைக்காக, குடிதண்ணீர்த்தாங்கியும், மலசலகூடமும் அமைக்கப்பெற்று வருகின்றன. (உ-103)

## நூல் வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி எழுதிய ''கலைஞானியும் கலைத்தொண்டும்'' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு, வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆ.சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. [செ]

# சுவர் ஓவியம்

(நல்லூர்)

'அடியார்கள் மனதில் பக்தியுணர்வைஏற்படுத்தக்கூடிய வகையிலான சுவரோவியங்கள்' யாழ் வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தின் உட்பிரகாரத்தில் வரையப்பட்டு வருகின்றன. (உ-103)

## தேயிலை வருமானம் உயரும்

(கொழும்பு)

கடந்த ஆண்டில் 10 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்த இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் இவ்வாண்டு முடிவில் 13 மில்லியன் ரூபாவாக உயர்வடையுமென எதிர் பார்க்கப்படுகிறது. (உ-4)

## இன்று பேரணி

[கொழும்பு]

நாட்டில் சமாதானத்தைவலியுறுத்தி இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப்பேரணிஒன்று நடைபெறவுள்ளது.

பெண்கள் அமைப்புக்களைசார்ந்தோரே இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஒழுங்கு செய்துள்ளனர். [வ]

வவுனியாவில்

# தேடுதல்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள பூந்தோட்டப்பகுதி முகாம் நேற்று முன்தினம் காலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின்போது சிலர் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது. (ந-5)

# இசைவிழா

(நல்லூர்)

எதிர்வரும் மேமாதத்தில் இசை விழா நடத்துவதற்கான ஏற்பாடுகளை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் மேற்கொண்டுள்ளனர். இதில் இளங்கலைஞர்கள், முதுபெருங் கலைஞர்கள் பங்குகொண்டு இசைக்கச்சேரிகளை நிகழ்த்துவர். [உ-103]

# மிதிவெடியில் சிக்கி காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் உள்ள செங்கலடிப் படைமுகாமில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் படைவீரர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முகாம் வளாகத்தை துப்பரவு செய்து கொண்டிருந்தபோதே இவர் மிதிவெடியில் அகப்பட்டுக் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

# இலங்கை வானொலிக்கு யாழில் இருந்தும்

# அறிவிப்பாளர் தெரிவு

(ஈச்சமோட்டை)

இனிவரும் காலங்களில் இலங்கை வானொலிக்கான அறிவிப்பாளர்கள் தெரிவு யாழ்ப்பாணத்திலிருந்தும் இடம்பெறும் என இலங்கை வானொலியின் யாழ்சேவைக் கட்டுப்பாட்டாளர் அனுராடிசில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாதுகாவலன் பத்திரிகையும் சமூகதொடர்பு ஆணைக்குழுவும் இணைந்து நடத்திய ஊடகவியலுக்கோர் அறிமுகம் எனும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பயிற்சியாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கும் முகமாக அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னைய காலங்களில் காணப்பட்ட சீரற்ற சூழ்நிலைகளால் இலங்கை வானொலியின் தமிழ் அறிவிப்பாளர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து நீண்ட காலமாக தெரிவு செய்யப்படவில்லை இது வேதனைக்குரியதே. எனினும் எதிர் காலத்தில் தேவைப்படும் வெற்றிடங்களுக்கான தேர்வில் யாழ்ப்பாணத்திலுள்ளவர்களும் சேர்த்துக் கொள்ளவிருப்பதாக அவர் தெரிவித்தார். (உ-59)

# கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகளுக்கு மின்சாரசபை ஒத்துழைப்பு

(அச்சுவேலி)

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி அமைந்துள்ள பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்டு வந்த மின் வெட்டு நேரத்தை மாணவர் நலன்கருதி மாற்றியமைக்குமாறு கல்விக்கல்லூரி சமூகத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மின்சார சபையினரால் மின்வெட்டு நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

முன்னைய காலத்தில் முன்னிரவு நேரத்தில் மின்வெட்டு அமுலில் இருந்ததால் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

மின்சார சபையினர் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பீடாதிபதி, உப-பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள ஆகியோர் கையொப்பமிட்டு கடிதம் ஒன்றை மின்சாரசபை பிராந்திய மின்பொறியியலாளர் எஸ் வல்லிபுரத்திற்குஅனுப்பியுள்ளனர். [உ-14[

# சாயி சேவா நிலையத்தில்

## ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மு.ப. 9.00 மணிக்கு இலட்ச அர்ச்சனை, பண்ணிசை பஜனை, சொற்பொழிவு ஆகிய ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

நண்பகல் அடியார்களுக்கு நாராயண சேவையும் நடைபெறவுள்ளது. (செ)

# முன்பள்ளிகளுக்கு தளபாட விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலி. தெற்கு பிரதேச சபையின் கீழ் பதிவு செய்து இயங்கிவரும் முன்பள்ளிகளில் தற்போது மிகவும் வசதி குறைந்த நிலையில் இயங்கிவரும் முன்பள்ளிக்கு அந்தந்த சனசமூக நிலையங்களினூடாக மேற்படி பிரதேச சபை தளபாடங்களை வழங்கியுள்ளது.

இதில் கோட்டைக்காடு சைவவாலிபர் சங்க பாலர் பாடசாலை, தாவடி தெற்கு ஸ்ரீ காளியம்பாள் முன்பள்ளி, சங்குவேலி தெற்கு ஸ்ரீ அம்பாள் முன்பள்ளி, புன்னாலைக்கட்டுவான் கணேசா ச.ச. நிலைய முன்பள்ளி, உடுவில் உதயசூரியன் பாலர் பாடசாலை, சுன்னாகம் சிவன் முன்பள்ளி, குப்பிளான் ஞானகலா பாலர் பாடசாலை, கல்லாக்கட்டுவன் காந்தரூபன் முன்பள்ளி, ஈவினை கலையரசி முன்பள்ளி, கந்தரோடை கண்ணன் சிறுவர் பாடசாலை, சங்குவேலி விநாயகர் முன்பள்ளி, ஈவினை கற்பக விநாயகர் முன்பள்ளி, மத்தாலோடை கலைவாணி முன்பள்ளி ஆகியவற்றுக்கே தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-02)

# நீச்சல் தடாகம் கோரும் பாடசாலைகள் நம்நாட்டில் இயங்குவது வேதனையே

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

ஓலைக் குடிசையில் இயங்கும் பாடசாலைகள் ஒருபுறம் இருக்க, நீச்சல் தடாகம் வேண்டும் எனக் கோரும் பாடசாலைகள் மறுபுறமும் இயங்குவது வேதனைக்குரிய விடயமே.

இவ்வாறு கல்வியமைச்சர் சிசில்பிறேம்ஜயந்த கவலை தெரிவித்துள்ளார்.

களிமண்ணால் கட்டப்பட்டு ஓலையால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்ட பாடசாலைகள் நம் நாட்டில் இருக்கும் போது,

சகல வளங்களையும் கொண்ட நகர்ப்புற பிரபல பாடசாலைகள், நீச்சல் தடாகங்கள் அமைத்துத் தரும்படி கோருவது வேதனை தருகின்றது.

இவ்வாறு தெரிவித்த கல்வி அமைச்சர்; இன்று உலகநாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப முறைகள் எமது பாடசாலைகளிலும் அறிமுகப் படுத்தப் படவுள்ளது.

அதற்கு அவசியமான ஆசிரியர்களையும் ஆலோசகர்களையும் விரைவில் நியமனம் செய்யவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். [செ]

# நாகலாந்து தீவிரவாதிகளும் சமாதானப் பேச்சுக்களில் இணைவு

(புதுடில்லி)
தனிநாடு கோரிப் போராடி வரும் நாகலாந்து தீவிரவாத குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாக மத்திய உள்த்துறை அமைச்சர் அத்வானி தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாநிலங்களும் அமைதியை நிலவச் செய்ய வேண்டியதன் அவசியம் உணர்ந்தே பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் தனிநாடு கோரிப் போராடி வரும் நாபா குடியரசுகட்சி, நாகலாந்து சோசலிக் கட்சி என்பவற்றுடன் சமாதானப் பேச்சுக்கள் இடம் பெறுமெனவும் உள்த்துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ 71)

# வெள்ளையின பெண் பண்ணையாளர் சிம்பாவேயில் சுட்டுக் கொலை

(ஹராரே)
சிம்பாவேயில் வெள்ளையின பெண் பண்ணையாளர் ஒருவர் இனந்தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வெள்ளையினத்தவரின் பண்ணை நிலங்களை சுவீகரிக்கும் பொருட்டு ஜனாதிபதி முகாபேயின் ஆதரவாளர்கள் கடந்த வருடம் வெள்ளை இனத்தவருக்கு எதிரான வன்முறைகளை ஆரம்பித்த சமயம் பண்ணையுடன் எரித்து கொலை செய்யப்பட்ட மார்டின் என்பவரின் தாயாரான 68 வயதுடைய குளோரியா ஒல்ட் என்ற பெண் மணியே ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவராவார்

பண்ணையில் தனிமையில் வசித்துவந்த இவர் பண்ணை வாயிலை திறந்துகொண்ட சமயம் மறைந்திருந்த வர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேவேளை அவரது காவல் நாய்கள் மூன்றும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன. (உ-7)

# லக்ஷர் இ தொய்பா அமைப்பு தாக்குதலுக்கு உரிமை கோரியது

[இஸ்லாமபாத்]
காஷ்மீரில் கடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துக்கு தாமே பொறுப்பு என லக்ஷர் இ.தொய்பா அமைப்பு உரிமை கோரியுள்ளது

காஷ்மீரில் தனி நாடு கோரி போராடி வரும் ஏனைய தீவிரவாத அமைப்புகளான ஹிஸ்புல் முஜாகிதீன் மற்றும் இஸ்லாமி, ஹெய்ஸ் போன்றவற்றுடன் இணைந்து இத்தாக்குதல்களை மேற்கொண்டதாக அவ் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

ரஜோரி மாவட்டத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இடம்பெற்ற தாக்குதலில் 17 பொலிஸார் ஸ்தலத்தில் கொல்லப்பட்டமை தெரிந்ததே. [உ-7]

## உலக தரிசனம்

# பிஜியின் முன்னாள் பிரதமர் நாடு திரும்பினார்

(சுவா)
பிஜியில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமமந்திரி மஹேந்திர சௌத்ரி தனது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்

நாடு திரும்பிய பிரதமமந்திரி பிஜியின் இனவாதத்துக்கு முடிவுகட்ட முன்வருமாறு நாட்டுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

8 இலட்சம் மக்களைக் கொண்ட பிஜி பல்லின மக்கள் கொண்ட ஜனநாயகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் பிஜி தொடர்ந்தும் ஏழ்மை நிலையில் தான் இருக்கும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

இதேவேளை மஹேந்திர சௌத்திரி மீண்டும்பிரதமரானால் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படும் என்று சண்டேரைம்ஸ் பத்திரிகை எச்சரிக்கை விடுத்துள்ளது

சுதேச பிஜிகள பலர் சௌத்ரியையும் அவரது ஆட்சியையும் வெறுத்து வருவது குறிப்பிடத்தக்கது (க-9)

# மோனாலிஸா ஓவியத்திற்கு தனியான மண்டபம்

(பாரிஸ்)
உலகம் பூராகவும் மிகப்பிரபலமடைந்த மோனாலிஸா ஓவியத்திற்கு பிரான்ஸில் உள்ள லூவர் நூதனசாலையில் புதிய தனியான மண்டபம் ஒன்று நிறுவப்பட்டு வருவதாகபிரான்ஸிய செய்திநிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

அந் நிறுவனம் மேலும் தெரிவிக்கையில்; இந்த ஓவியத்தைப் பார்த்துவிட்டு செல்வதற்காக வருடா வருடம் 50 இலட்சம் பேர் லூவர் நூதன சாலைக்கு வருவதாகவும் இதனால் லூவர் நூதன சாலையில் பெரும் நெருக்கடி ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே இப் புதிய மண்டபம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிர்மாணிக்கப்படும் இப் புதிய மண்டபத்தில் சுமார் ஐயாயிரத்துத்துக்கு மேற்பட்டோர் ஒரே நேரத்தில் இவ் ஓவியத்தைப் பார்வையிடக் கூடிய வகையில் மண்டபம் அமைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# நிலக்கரி சுரங்க விபத்தில் 6பேர் கொல்லப்பட்டனர்

(மும்பாய்)
இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 6பேர் கொல்லப்பட்டனர்.

கடந்த திங்கள் காலை ராஸ்வாரி துர்க்காபூர் போன்ற மேற்கு சுரங்கப்ப குதியின் 4 ஆம் இலக்க சுரங்கத்திலு தொழிலாளர் சென்ற பின்னர் நண்பகல் 12.30 மணிக்கு சுரங்கம் இடிந்து வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

இச்சுரங்கம் இடிந்து வீழ்ந்ததற்கு சுரங்கத் தொழில் நிர்வாகமே காரணம் என்றும் அதற்கு காரணமானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். [க-7]

## செய்திப் பரல்

★ திபெத்தின் ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா இம்மாதம் 31ஆம திகதி தாய்வானுக்கு 10 நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

★ முன்னாள சோவியத் ஜனாதிபதி மிகையில் கொர்பச்சேவ் தனது 70 ஆவது பிறந்ததினத்தை வரும் வெள்ளியன்று கொண்டாடவுள்ளார்.

★ மேற்கு நேபாளத்தில் ஏற்பட்ட சின்னம்மை நோயின் காரணமாக கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 26 பிள்ளைகள் இறந்துள்ளனர்.

★ ஜப்பானின் நான்கு பிரதான எதிர்க் கட்சித் தலைவர்களும் பிரதமர் யோஷிரோ மோரி மீது நம்பிக்கை இல்லாத தீர்மானம் ஒன்றை கொண்டு வர இணங்கியுள்ளார்கள்.

★ அமேஸன் காட்டுப்பகுதியில் கடந்த நாலரை மாதங்களாக பணயக் கைதிகளாக்வைக்கப்பட்டிருந்த 7 வெளி நாட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (உ-9)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)
மார்ச் மாதம்04-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

## நல்லூர்

| | |
|---|---|
| 177133 பி | 177200 ஏ |
| 179717 ஏ | 179717 பி |
| 179717 சி | 179718 ஏ |
| 179726 ஏ | 179727 ஏ |
| 179727 பி | 179731 ஏ |
| 179731 பி | 179731 சி |
| 179742 ஏ | 179742 பி |
| 179742 சி | 179745 ஏ |
| 179746 ஏ | 179746 பி |
| 179746 சி | 179749 ஏ |
| 179750 ஏ | 184096 ஏ |
| 184119 ஏ | 184120 ஏ |
| 163375 ஏ | 166040 ஏ |
| 173611 ஏ | 173611 பி |
| 181723 ஏ | 181772 ஏ |
| 182028 ஏ | 85381 ஏ |
| 184568 ஏ | 184610 ஏ |
| 184610 பி | 184610 சி |
| 184610 டி | 184771 ஏ |
| 184771 பி | 184771 சி |
| 184771 டி | 184771 ஈ |
| 184771 எவ் | 184771 ஜி |
| 184772 ஏ | 184772 பி |
| 184814 ஏ | 173712 ஏ |
| 178850 ஏ | 178850 பி |
| 178850 சி | 179096 ஏ |
| 179358 ஏ | 179358 பி |
| 179362 ஏ | 179604 ஏ |
| 179628 ஏ | 179628 பி |
| 179628 சி | 182672 ஏ |
| 182672 பி | 182756 ஏ |
| 183031 ஏ | 183282 ஏ |
| 183298 ஏ | 183298 பி |
| 183344 ஏ | 183344 பி |
| 183344 சி | 183344 டி |
| 183411 ஏ | 183426 ஏ |
| 183426 பி | 183426 சி |
| 183438 ஏ | 183442 ஏ |
| 183492 பி | 183498 ஏ |
| 183507 ஏ | 184863 ஏ |
| 184863 பி | 184863 சி |
| 185901 ஏ | 185003 ஏ |
| 185065 ஏ | |
| 181496 ஏ | 181496 பி |
| 181584 ஏ | 182642 ஏ |
| 181642 பி | 182642 சி |
| 181642 டி | 182875 ஏ |
| 183126 ஏ | 183126 பி |
| 183126 சி | 183129 டி |
| 183176 ஏ | 183183 ஏ |
| 183201 ஏ | 183267 ஏ |
| 183309 ஏ | 183377 ஏ |
| 183377 பி | 183390 ஏ |
| 183390 பி | 183403 ஏ |
| 183424 ஏ | 183424 பி |
| 183494 ஏ | 183494 பி |
| 183932 ஏ | 183932 பி |
| 184831 ஏ | 184857 ஏ |
| 184893 ஏ | 184900 ஏ |
| 184900 பி | 184903 ஏ |
| 184937 ஏ | 184980 ஏ |
| 185013 ஏ | 185013 பி |
| 185081 ஏ | 185100 ஏ |
| 185122 ஏ | |

## சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 160601 ஏ | 160601 பி |
| 178547 ஏ | 178547 பி |
| 179293 ஏ | 181482 ஏ |
| 181482 பி | 181696 ஏ |
| 181696 பி | 182659 ஏ |
| 182690 ஏ | 182734 ஏ |
| 182734 பி | 182734 சி |
| 183053 ஏ | 183053 பி |
| 183053 சி | 183189 ஏ |
| 183199 ஏ | 183220 ஏ |
| 183252 ஏ | 183252 பி |
| 183252 சி | 183297 ஏ |
| 183301 ஏ | 183301 பி |
| 183315 ஏ | 183331 ஏ |
| 183331 பி | 183346 ஏ |
| 183347 ஏ | 183409 ஏ |
| 183409 பி | 183436 ஏ |
| 183436 பி | 183436 சி |
| 183437 ஏ | 183440 ஏ |
| 183445 ஏ | 183452 ஏ |
| 183460 ஏ | 183460 பி |
| 183462 ஏ | 183478 ஏ |
| 183478 பி | 183485 ஏ |
| 183485 பி | 183491 ஏ |
| 183491 பி | 183491 சி |
| 183491 டி | 183493 ஏ |
| 183518 ஏ | 184485 ஏ |
| 184485 பி | 184485 சி |
| 184485 டி | 184485 ஈ |
| 184485 எவ் | 184835 ஏ |
| 184844 ஏ | 184844 பி |
| 184856 ஏ | 184889 ஏ |
| 184890 ஏ | 184890 பி |
| 184890 சி | 184958 ஏ |
| 184962 ஏ | 184994 ஏ |
| 185025 ஏ | 185079 ஏ |
| 185079 பி | 182767 ஏ |
| 182767 பி | 182767 சி |

## உடுவில்

| | |
|---|---|
| 170699 ஏ | 184066 ஏ |
| 184136 ஏ | 184136 பி |
| 184136 சி | 184163 ஏ |
| 184163 பி | 184163 சி |
| 184164 ஏ | 184164 பி |
| 169168 ஏ | 169282 ஏ |
| 172992 ஏ | 178778 ஏ |
| 178778 பி | 178779 ஏ |
| 178779 பி | 178780 ஏ |
| 178343 ஏ | 179001 ஏ |
| 179235 ஏ | 179235 பி |

# பத்திரிகை வெளிவராத நாடுகள்

(லண்டன்)
பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும். இந் நாளில் 29 நாடுகளில் பத்திரிகைகளே வெளிவருவதில்லையென யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இந் நாடுகளின் 5நாடுகளில் சொந்த தொலைக்காட்சி சேவைகள் கிடையாது. (உ-7)

# இராசி பலன்

8 03 2001
(மாசி 24 வியாழன்)
சதுர்த்தசி பி இ 1.47 வரை
மகம் பி இ 3 10 வரை
ராகு காலம் 1 55 - 3 25
சுப நேரம் 7.55 - 9 25
சித்தம், மாசிமகம்

**மேடம்**
தாழ்வு நிலை, மனச்சோர்வு, முயற்சி தாமதம், அரச நன்மை

**இடபம்**
தன்நம்பிக்கைக் குறைவு, தாய் வழி உறவு, காரிய ஜெயம், மனப்பயம்.

**மிதுனம்**
காரியம் கைகூடும், பிரயாணம், தன வரவு, சகோதரர் உதவி

**கடகம்**
வாக்குக் கலகம், முயற்சி மந்தம், பொருள் விரயம், அதிகாரிகள் வெறுப்பு

**சிங்கம்**
கற்பனை மிகுதி, உடல் நலம், சயன சுகம், காரிய வெற்றி.

**கன்னி**
கோபப்படுதல், பிரயாணம், எதிர்பாராத நன்மை, சுப செலவு.

**துலாம்**
காரியம் கை கூடும், தன லாபம், குடும்ப சுகம், கௌரவம்.

**விருச்சிகம்**
தொழில் சிறப்பு, மேன்மை, நிலை மாற்றம், முயற்சி கை கூடும்.

**தனுசு**
பிரயாணம், கட்டுப்பாடு, திட்ட மிடல், மனக்கிலேசம்.

**மகரம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாண பயம், அமைதிக் குறைவு, காரியத் தடங்கல்.

**கும்பம்**
பிரயாணம், விருந்து உபசாரம், காரிய வெற்றி, தன வரவு.

**மீனம்**
பகைவர் விலகுவர், புதிய முயற்சி, வியாதி குணமடைதல், சந்தோசமான சம்பவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின்
தோன்றாண்மை நன்று.
- குறள் -

வலம்புரி

## மாதர் உரிமை!

உலகப் பெண்கள் தினம் இன்றாகும். சர்வதேசம் முழுவதும் பெண்ணுரிமையைப் பாதுகாக்கும் நோக்குடன் மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றன. அடக்கப்பட்ட பெண்ணினம் விழித்தெழுவதற்கு இத்தினம் வழி வகுத்தாலும், பெண்ணினத்தைக் கூறு போட்டுப் பார்ப்போமாயின் தாய், சகோதரி, இல்லாள் உறவு என்று பிரிவுபட்டு ஆணினத்தோடு - ஒவ்வோர் குடும்பத்தோடு பின்னிப் பிணைந்து நிற்பதைக் காண்கிறோம். பெண்களை நாம்தாயாக, சகோதரமாக பார்க்கும் சிந்தை ஆணினத்திடம் தோன்றுமாயின் அடக்குமுறை என்ற பேச்சிற்கே இடமில்லாது போகும்.

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்த பாரதி மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று குரல் எழுப்பினான். பாரதியின் அறை கூவலில் இரு பெரும் கருத்துக்கள் பொதிந்துள்ளன. அதில் ஒன்றுமாதர்களுக்கு எதிராக நடக்கும் ஒடுக்கு முறைகளைக் கொளுத்த வேண்டுமென்பதும், மற்றையது மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையாகிய பெண்கள் தங்களைத் தாங்களே இழிவு செய்யும் மரபை அழிப்பதாகும்.

தென்னாட்டிலிருந்து ஓங்கி ஒலித்ததமிழ்க்கவிஞனின்குரல் இன்று சர்வதேச மெங்கும் பெண்ணுரிமை காக்கும் தினமாக மிளிர்ந்துள்ளது. பெண்களைத் தெய்வமாகப் போற்றும் உயரிய பண்பு தமிழர்க்கு உண்டு. ஆனால் இன்று யாழ்ப்பாணத்து மண்ணில் இளம் பெண்கள் நடமாடுவதில் பெரும் சிக்கல்களையும், இடையூறுகளையும் எதிர் நோக்குகின்றனர். இள் வட்டங்களின் சேட்டைகள் மலிந்துவிட்டன, விரசமான பேச்சுக்கள், விபரிதமான செயற்பாடுகள் எல்லாம் வேதனைக்குரியவை. இளம் பெண்கள் மீது சேட்டை விடுவோருக்கு அறிவுரைகூறவேண்டிய இளம் வர்க்கம் தமது தார்மீகப் பொறுப்பை மறந்து பெண்கள் மீது சேட்டை விடுவது எமது சமூகக் கட்டுப்பாட்டின் சிதைவையும், பாடசாலைக் கல்வியில் உள்ள குறைபாட்டையுமே எடுத்துக் காட்டுகிறது.

### மறைந்தார் மாண்பு

# தமிழுக்குப் புகழ் சேர்க்க வந்துதித்த கமலரூபன்

# தணலோடு தணலாககி புகழுடம்பாகினான் !

**அன்னைத் தமிழ் வளர்த்து தமிழ்த்தாயின் அடியினை அலங்கரித்து வந்த புன்னகை மன்னன் கமலரூபன்.**

ஆம் ஈழவழநாடு கல்வியாலும் வீரத்தாலும் பெருமை சேர்த்தது காலாதிகாலமாக பல புலவர், அறிஞர் வாழ்ந்து தமிழ் வளர்த்த சிவ பூமி இது. சங்ககாலத்து பூதத்தேவனார் முதல் பண்டிதமணி வரை பல்வேறுபட்ட அறிஞர்கள், புலவர்கள் தமிழ்த்தாயினை அலங்கரித்தனர். அவ் வகையில் சிறப்பு மிகு திருநாட்டில் வளமிகு வடமராட்சிப்பகுதியில் கரவெட்டிஊரில் பண்டிதர்பரம்பரையின் வாரிசென குறிப்பிடப்பட்ட கமலரூபன் 30.12.1970 இல்பிறந்தவன். அமரர்கள் பொன்னையா, செல்லம்மா தம்பதியினரின் தனி சிறந்தவாழ்விலே பிறந்த இவன் 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கிணங்க சிறு பராயம் முதல் கல்வியிற் சிறந்து விளங்கி ஓ எல் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்து ஏ.எல் படித்து சிறப்புறுபெறு பேற்றுடன் பல்கலைக் கழகத்தினுள் பிரவேசித்தவன்

### தமிழ்த்துறை விரிவுரையாளன்

அங்கே தமிழ்மொழி மீது கொண்ட பற்றுக்காரணமாக தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்பதற்கமைய தலை சிறந்த மாணவனாக விளங்கி, பல்கலைக்கழக தமிழ்த்துறை வரலாற்றிலே முதல் வகுப்பிலே சித்தியடைந்த விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரில் ஒருவனாக திகழ்ந்தவன். அவனது திறமை அவனை ஒரு தமிழ்த்துறை விரிவுரையாளனாக்கி கௌரவித்ததில் வியப்பில்லை இவன்ஒரு அசாதாரணமானவன் வாழ்விலும் அசமத்துவ வளர்ச்சியைக் கண்டவன். அதன் காரணமாகவோ அவன வாழ்வும் அசாதாரணமாகிவிட்டது.

**எஸ். பத்மராஜா**
ஆசிரியர்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி

### வறுமை வாழ்வு

புன்னகை மன்னனாக ஒரு விலாசம் காட்டாத மன்னவனாக கன்னத்தில் குழி விழ சிரிக்கும், அந்தச் சிரிப்பு, அவனது கள்ளங்கபடமற்ற உள்ளத்தை வெளிப்படுத்தும். அவன் குடும்பம் மிகவும் வறுமையானது. காடு சென்று களனி சென்று உதிரத்தை வேர்வையாக்கி முயன்று உழைத்து தன்னை ஆளாக்கியதாக கூறிய ரூபன், வறுமை கல்விக்கும்வாழ்விற்கும் தடையல்ல என்பதை நிரூபித்துக் காட்டியவன். அன்பாலும் கள்ளம்கபடமற்ற சிரிப்பாலும் அனைவரையும் கவர்ந்த இவன் இறுதி மூச்சு வரை தமிழை உச்சரித்தவன். பல்கலை வளாகத்திலும் பிறந்த பிரதேசத்திலும் தமிழ் நூலுடன் உலாவிவந்தவன். இவனது நிழலில் ஆயிரம் ஆயிரம் மாணவ மணிகள் இளைப்பாறி அறிவுப் பசியை தீர்த்தனர்.

### புகழுடலாகினான்

சின்னவயதில் இவன் ஒரு ஆசானாகி தமிழறிஞனாக வர விரும்பாத பொல்லாத காலனும் எட்டே மாதத்தில் இல்லறத்தையும் விடுத்து பூதவுடலை புழுடலாக்க அனல் வாதம் புரிந்தனனே ? கமலம் போன்ற ரூபம், அடக்கமும், அன்பும், பொறுமையும் புன்சிரிப்பும், நட்பும், கல்வியும், நிறைந்த அந்த மனிதனை, அனல் மூலம் அழிக்க ஆண்டவனும் எண்ணினானே ? முப்பதாவது பிறந்த நாளின் மறு நாள் கமலம் உதிர்ந்த செய்தி காலைக் கதிரவன் வரவுடன் வந்தது மரணச் செய்தியை நம்பவேமுடியவில்லை இச் செய்தி பொய்யாதோ என்று எண்ணிய உள்ளம் தான் எத்தனை? மரண நிகழ்வில்கூட துணைவேந்தர் முதல் மாணவர்வரை, உறவு முதல் ஊரார் வரை கதறியழுத நெஞ்சம் தான் எத்தனை எத்தனை! அத்தகைய வாழவேண்டிய மலர் காயாக முன்னரே உதிர்ந்து புகழுடலுடன் நற்றமிழ் நூலையும் சுமந்து யாத்திரை சென்ற காட்சி ..... இன்னும், ஏன்? என்றும் எம்நெஞ்சத்தை விட்டகலாது. இது ஒரு மனிதத்தின் மரணம். தமிழின் இழப்பு உற்றநட்பின் இழப்பு

# யுத்த அனர்த்தங்களினால் இருபாலை பாதிப்பு

# இக்கட்டான நிலையில் இடம் பெயர்ந்த மக்கள்

தென்மராட்சியில் கடந்த வருடம் இடம்பெற்ற யுத்த அரக்கனின் கோரதாண்டவம் இருபாலையூரின் பசுமை, செழுமை என்பவற்றை அழித்து ஏப்பம் விட்டுள்ளது. ஆம், யுத்த அனர்த்தம் இடம் பெற்றது தென்மராட்சிப் பகுதியில், ஆனால் அங்கு இடம் பெற்ற அழிவுகள் சேதங்களுக்கு நிகராக வயலும் வயல் சார்ந்த மருத நிலப் பிரதேசமான இருபாலை எனும் அழகிய சிற்றூர் யுத்தப் பாதிப்பினால் அழிவடைந்து, வளங்கள் அனைத்தும் சிதைந்து செழுமை பசுமை அழிந்து அவலட்சணமாக மயானபூமி போல் இன்று காட்சியளிக்கிறது.

### பாதுகாப்பு முனை

இருபாலைப்பகுயில் நேரடி யுத்தம் நிகழவில்லையாயினும், தென்மராட்சியில் குறிப்பாக கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு பகுதிகளில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால், அப்பகுதியின் பாதுகாப்பு போர் முனையாக இருபாலை, இராணுவ முற்று கைக்குட்படுத்தப்பட்டு முழுமையாக பயன்படுத்தப்பட்டது.

இதன் தாக்கம் நீண்டு பரவி அப் பிரதேசம் எங்கும் அழிவடைந்து, உடைவடைந்து, எரியூட்டப்பட்டுக் காணப்படுகிறது.

### இடம்பெயர்வு

தென்மராட்சியில் இடம் பெற்ற சண்டையினால் இருபாலையைச் சேர்ந்த ஜே/257, ஜே/258, ஜே/260 ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவைச்சேர்ந்த ஏறத்தாழ ஐந்நூறுக்கும்மேற்பட்டகுடும்பங்கள் இடம்பெயர்ந்தனர். போரின் தணிவைத் தொடர்ந்து ஒரு சில பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்த போதும் ஜே/257, ஜே/258 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த அரசடி வீதிப்பகுதி, வீ எச்லேன் பகுதி இருபாலை கிழக்கு கந்தவேள் பாடசாலைச் சூழல், இருபாலை மடத்தடிப் பகுதி மற்றும் ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள கடந்த 04 01 2001 அன்றே அங்கு மீளக்குடியமர அனுதிக்கப்பட்டனர்.

**ஈ. ஏ. ஜெயன்**

### மீளக் குடியமர்வு

1995 ஆம் ஆண்டு சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கைக்காலத்தில் வலிகாமமே ஒட்டுமொத்தமாக இடம் பெயர்ந்து சென்று, 1996 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்து அப் பாதிப்புக்கள் அழிவுகளிலிருந்து இருபாலைக் கிராமம் மீள முன்னர் மறுபடியும் மீண்டும்மொரு இடம் பெயர்வு ஏற்பட்டு தொழிலிழந்து, சொத்துக்களை இழந்து, அப்பகுதி மக்கள் நிர்க்கதியாகி மீளவும் அப்பகுதியில் குடியேறுவதில் அச்சம் காட்டி வருகின்றனர் ஏனெனில் இராணுவம் அப்பகுதியை விட்டு அகன்றபோதும் மிதிவெடிகள், பொறிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் காணப்படலாமென்ற அச்சம். இதற்றை அகற்றி அம் மக்களை மீள்க்குடியமர்த்த ஏற்ற ஒழுங்குகள் இதுவரை மேற்கொள்ளப்படவும் இல்லை.

மக்கள் மீளக்குடியமர்வதில் மற்றொரு தடையாக அப் பகுதி வீடுகள், கூரைகள் அற்று வானமே கூரையாகி கதவு. யன்னல்கள், மரங்கள் இன்றி சுவர் இடிந்து, ஓலைக் குடிசைகள் எரிந்துசாம்பாராகி காணப்படுகின்றன பயன் தரு மரங்கள் இருபாலையின் செல்வமான பனைகள், தென்னைகள் முறிவடைந்தும்

→ 2ஆம் பக்கம் பார்க்க



## சாயிஅருளமுதம்

உங்கள் மனோபாவத்திற்கேற்ப கடவுள் மீது பழிசுமத்துவதைத் தவிருங்கள். எல்லாம் சரிவர நடக்கும்போது இறைவன் உங்களுக்குச் சமீபமாக வந்துவிட்டாரென நீங்கள் சொல்கிறீர்கள், ஏதாவது பிழைத்துவிட்டால் கடவுள் உங்களைக் கைவிட்டுத் தூரத்திற்குச் சென்றுவிட்டாரெனச் சொல்கிறீர்கள். அவர் தூரத்திற்கும் அண்மைக்கும் நகர்ந்து கொண்டிருப்பவரல்ல. உங்களிடமிருந்து அவர் எவ்வளவு தூரத்திலிருக்கிறாரோ அதே அளவு தூரத்தில் தான் அவரிடமிருந்து நீங்கள் இருக்கிறீர்கள். அவர் எங்கும் நிறைந்தவர் என்றும் அவர் உங்கள் இதயத்திலிருக்கிறார், அவரை அங்கே கண்டுகொள்ளுங்கள். உங்களுக்கு மிகவும் கிட்டியவரும் அண்மையிலுளளவரும் அவரேயென்பதை உணர்ந்து கொள்ளுங்கள். அவரே உங்கள் சுய ஆத்மா. பயங்கரமானவரோ, மிருதுவானவரோ அன்று. சாதாரணமாக உறைகின்றவர்.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

## தவக்காலச் சிந்தனை - 9



'வீடுவரை உறவு; வீதிவரை மனைவி; காடுவரை பிள்ளை; கடைசிவரை யாரோ' என்ற தன் கேள்வியில் மனித உறவுகளின் நிலையாமையை பாடினன் கவிஞன். ஆனால் இறையுறவு நிலையானது நிபந்தனையில்லாதது என்கிறது இறைவார்த்தை. இறையுறவின் அடிப்படையும், வெளிப்பாடும் செபமாகும். செபிப்பது என்பது கதவைத் தட்டுவது போல தட்டும்போது வேண்டா வெறுப்போடு அல்ல. மாறாக ஏக்கத்தோடு, தாகத்தோடு. உள்ளார்ந்தஅன்போடு நம்பிக்கையோடு தட்டவேண்டும், கேட்கவேண்டும். இறை உறவைத்தேடுவதில் தளர்ச்சியின்றி தொடர்ந்து தேட வேண்டும் விண்ணக வீட்டை தட்டுவதில் இறை உதவியைத் தேடுவதிலும் சிறிதும் தயக்கமின்றி நம்பிக்கையுடன் இடைவிடாது முயல வேண்டும் என்பதே இறைவார்த்தையின் தூண்டுதல். 'எவ்வளவு செபம்... எத்தனை கோயிலுக்குப் போனேன்... இனி கடவுளை நம்புவதில் பயனில்லை' என்று நம் இதயக் கதவுகளை மூடிக் கொண்டால் கடவுள் வந்து நம் இதயங்களைத் தட்டினாலும் நாம் திறக்கப்போவதில்லை.

- காவலன் -

எண்ணம்போல வண்ண
நகைகளை மங்கையர்
மனங்குளிர செய்து
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா**
**ஜுவல்லறி**
**74, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**
[கி–1575]

# புலிகளுடன் பேசுவதை வலியுறுத்தி
# பெண்கள் அமைப்பு இன்று பேரணி

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை நிறுத்தி, அரசாங்கம் அவர்களுடன் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென்பதை வலியுறுத்தி இன்று கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றுஇடம்பெறவுள்ளது.

சர்வதேச மகளிர் தினமான இன்று, மக்கள் சமாதான முன்னணியின் ஆதரவுடன் யுத்தத்துக்கு எதிராக பெண்கள் அமைப்பு, இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபடும்.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்தும், பதாதைகள் மற்றும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு முச்சக்கர வண்டிகள் சகிதம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் பேரணி ஆரம்பமாகி அலரி மாளிகை, இனவிவகார அமைச்சு மற்றும் ரணில்விக்கிரம சிங்கவின் வாசஸ்தலம் ஆகியவற்றைச் சென்றடையும். [இ]

# கொழும்பு-மன்னார் விரைவில் பஸ்சேவை

[கொழும்பு]
கொழும்புக்கும் மன்னாருக்குமிடையிலான புதிய பஸ் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்சேவையில் ஈடுபடுத்துவதற்கென இரண்டு புதிய பஸ் வண்டிகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் வி. எஸ். சொக்கலிங்கம் வழங்கியுள்ளார்.

மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவரிடம் வடபிராந்திய பொது முகாமையாளர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இப்புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்பஸ்சேவையில் கொழும்பில் இருந்து நள்ளிரவு 12 மணிக்கும், மன்னாரிலிருந்து 3 மணிக்கும் ஆரம்பிக்கப்படும். பஸ் புறப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. (வ)

# விஞ்ஞான பேராசிரியருக்கு இன்று பிரியாவிடை

(யாழ்ப்பாணம்)
யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீட மாணவர்கள் இம்மாத இறுதியில் இளைப்பாறும் பேராசிரியர் வி கே. கணேசலிங்கத்துக்கு இன்று பிரியாவிடை வைபவமொன்றை நடத்தவுள்ளனர்.

பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறும் இந் நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர். குமாரவடிவேல் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (இ)

**அமெரிக்க**
செய்து இச்சந்திப்பு இடம்பெறுமென முற்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்த போதும். இறுதிநேரத்தில் திட்டம் கைவிடப்பட்டு பல்கலைக்கழகத்திற்குச் செல்லாமல் யு என் டி பி காரியாலயத்தில் சந்திப்பு இடம் பெற்றது.

இதேவேளை பிரித்தானிய அரசாங்கம் தமிழீழவிடுதலை புலிகளைதடைசெய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாதைகள் மற்றும்சுலோகங்கள் என்பன வளாகச்சூழலில் கட்டப்பட்டு அமெரிக்கத் தூதுக்குழுவின் வருகைக்காக யாழ்பல்கலைக்கழகச் சமூகம் காத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது [இ-9.10]

**செம்மணி.';**
நேற்று பெரும் மனிதப் புதைகுழிகள் உள்ளதாகக்கருதப்படும செம்மணிப் பகுதிக்கு சென்று பார்வையிட்டனர்.

தோண்டப்பட்ட புதைகுழிகள் மற்றும் அங்குள்ள மண் அமைப்பு சமநிலைகளை தூதுக்குழுவினர் பார்வையிட்டனர். [இ2,9]

**தற்பாது..--**
நிலைமையைப் புரிந்து கொண்ட பாதசாரிகள் அப்பெண்ணை எழுப்பி சம்பவத்தைக் கூறினர். குறித்தபெண்ணும் மண்ணைத் தட்டி தன் பயணத்தைத்தொடர்ந்தார்.

அங்கு நின்ற பாதசாரிகளுக்கோ அடக்க முடியாத சிரிப்பு. என்ன செய்வது பழக்க தோஷமாயிற்றே, சமாளித்துத்தான் ஆக வேண்டும். (ந)

**பெற்ற :--**
டார்.
குழந்தையை கோப்பாய் பொலிசார் யாழ் நீதிமன்றில் ஒப்படைத் துள்ளனர். யாழ் மாவட்ட நீதிபதி இ த விக்கினராஜா மேற்படி குழந்தையை அரச சிறுவர் பாதுகாப்பு நிலையத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (இ–6)

**பேச்சுவார்த்தையே.**
விடுதலைப்புலிகளை நாம் பயங்கரவாத அமைப்பாகக் கருதுகின்றோம். அத்துடன் விடுதலைப்புலிகள் இலங்கைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறுவதை நான் நம்பவில்லை.

அதேவேளை நாங்களும் தமிழ்மக்களின் உரிமைகளைக் கோருகின்றோம். தமிழ் மக்கள் சமத்துவமாகவும், சுயமரியாதையுள்ளவர்களாகவும் ஜனநாயக இலங்கையில் வாழக் கூடியவர்களாக இணைய வேண்டும்.

இலங்கையின் எப்பாகமும் ஒரு தனிப்பட்ட இன மக்களுக்குரியதென்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை பல்லின மதங்களை, கலாசாரத்தையும் கொண்ட வொருநாடாகும்.

இந்த நாட்டின் பிரச்சினை நாட்டு மக்களாலேயே பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டுமென்று நாம் திடமாக நம்புகின்ற போதிலும், சம்பந்தப்பட்டவர்கள் பொருத்தமானதெனக் கருதினால் அவ் வழிகளில் உதவ ஆயத்தமாக இருக்கிறோம்.

இவை ஐக்கிய அமெரிக்க அரசு கொண்டிருக்கின்ற முக்கியமான கருத்துக்களாகும். இது எந்தளவில் பயனுடையதாக இருக்க முடியுமோ அந்த அளவில் அவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். இது உங்களுடைய நாடு, உங்களுடைய எதிர்காலம், நீங்கள் எத்திசையில் செல்ல வேண்டுமென்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

இலங்கை அரசுடன் பேசுவதற்கு புலிகளே உரியவர்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோம். அதற்கு புலிகளின் இராணுவ ஸ்திரத்தன்மையே காரணமாகும். (வ-9)

# காங்கேசனில் இருவர்

(யாழ்ப்பாணம்)
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இருஇளைஞர்கள் காங்கேசன் துறைத் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிசாரினால் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கைதடியில் கைது செய்யப்பட்ட நவரட்ணராஜாநிமால் (வயது 14 'வட்டக்கச்சி)' சரவணமுத்து சிவானந்தன் (வயது 23, கிளிநொச்சி) ஆகிய இருவருமே தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். (இ-2.10)

## காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறையில் கடந்த 4ந் திகதி ஏற்பட்ட கார் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தொண்டமானாற்றைச் சேர்ந்த இராசரத்தினம் நேசரத்தினம் (வயது 41) என்பவர் நேற்று மரணமடைந்தார். (ந-6)

**சமரச ---**
மாறு ஜனாதிபதிசந்திரிகா பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்காவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழுவினர் தோட்ட முதலாளிமாரைச் சந்தித்துப் பேச்சுநடாத்தினர் இதன் போது எதுவிதமுடிவும் எடுக்கப்படவில்லை. (வ)

அழகிற்கு அழகூட்டும்
தங்க நகைகளை
உடனுக்குடன் செய்து
தருபவர்கள்
**நியூ**
**ராதிகாஸ்**
**நகைமாளிகை**
**189. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
(கி/ 1576)

# மகளிர் நிகழ்வு

(கோப்பாய்)
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சமூகக் கல்வி மன்றம் நடாத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு ரதிலஷ்மி மண்டபத்தில் தலைவர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொள்வர். (இ)

## யாழ்பல்கலையில் மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)
யாழ்பல்கலைக் கழக சமூக மன்ற மாணவர்கள் இன்று சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளை பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் சமுகவியல் மாணவர்களால் நூலொன்றும் வெளியிடப்படும். (இ)

## விசேட பூஜை

(யாழ்ப்பாணம்)
யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இரண்டாவது தடவையாக துணைவேந்தராகப் பதவியேற்று அகவையொன்றை நிறைவு செய்வதையொட்டி அவரது பணிக்கு ஆசிவேண்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வளாக ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட பூஜையும் அத்துடன் நவோந்திர சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெறும். (இ)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
**விமலேந்திரனின் அன்புத் தந்தையார்**
**சின்னத்தம்பி கோபாலன்**
(இராசையா)

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி-கோபாலன்
(இராசையா)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், 110இராசாவின் தோட்டவீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி – கோபாலன் 6-03-2001 ல் காலமாகிவிட்டார்.

அன்னார் கோபாலன் செல்லம்மாவின் பாசமிகு கணவரும், சுதந்திரபாலன் மகேந்திரன் (விசுவமடு) தெய்வேந்திரன், பாலேந்திரன், இராஜேந்திரன், புவனேந்திரன்–(மல்லாவி தவமணி, விமலேந்திரன் ஆகியோரின் அன்புதந்தையும், தெய்வேந்திரராணி, சாந்தநாயகி [விசுவமடு] நாகேஸ்வரி, காலம்சென்றசகுந்தலாதேவி, குகனேஸ்வரி, [ஆசிரியை, வைத்தீஸ்வராகல்லூரி யாழ் ]விமலாதேவி[மல்லாவி] பாலச்சந்திரன் [அஞ்சல அலுவலகம் சாவகச்சேரி] நிசாந்தினி [ஆசிரியை யாழ், இந்து ஆரம்பபாடசாலை] ஆகியோரின்அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான அன்னக்கிளி[கரம்பொன்] பொன்னுத்துரை [வேலணை] நல்லம்மா [யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புசகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [இன்றுவியாழக்கிழமை] 8. 03. 2001 அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்
**கோ. சுதந்திரபாலன் (மகன்)**
G S B.தொலைத்தொடர்பகம்
பாப்பையா கடைச் சந்தி
யாழ்ப்பாணம்.

இல–110, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்
தொலைபேசி–021 . 3220
தொலைநகல்–021-3430
[கி–1573]

**PARANAN**
**COMMUNICATIONS**
**புத்தக விற்பனை நிலையம்**
☆ கம்பியூட்டர் புத்தகங்கள்
★ பாட நூல்கள்
138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 - 2365
[கி–1578]

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.